# தமிழ்

# மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 2 | ஜூலை 1942 | இதழ் 7

## தமிழ் மருத்துவ நூல்களின் நிலைமை

"அகத்தியன் ஆண்டுவிழாவிற்கு டாக்டர் N, சுப்பிரமணியம் L. I. M. எழுதி அனுப்பிய 'சித்த வைத்தியத்தின் வலிமை' எனும் (வியாசத்தில்) உரைநடையில் 'மருத்துவர் இலக்கண உதவிகொண்டு மருந்து நூல்களிலுள்ள பிழைச் சொற்களை நீக்கி சுத்த பாடமாக்குவது மிகவும் அவசியம்' எனவும், 1942 ம் ஆண்டு மே மாத அகஸ்தியன் இதழில் கோயம்புத்தூர் C. K. குமாரசாமியவர்கள் "மேலும் 'எழுதினவன் எட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' எனும் முதுமொழிப்படி தற்காலம்வரை அச்சகமேறி வெளிவந்துள்ள சித்தர் நூல்கள் பலவற்றிலும் தாள் ஒன்றுக்குக் குறைந்தது 10, 15 எழுத்துப் பிழைகள் இருக்கின்றன" எனவும் எழுதியிருந்தார்கள். எம்முடைய கருத்து மிதே.

இக்கருத்தைச் சில ஆண்டுகளுக்கு முன்பே உள்ளத்தில் கொண்டு பிழையிலாது சித்தநூல்களை அச்சிட்டு வெளியிட முயன்றோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அச்சிடவும் தொடங்கினோம். எமது நோக்கங்களைத் தமிழ் மருத்துவப் பொழில் மலர் ஒன்று இதழ் ஒன்றில் காண்க. முதலில் சிறிய நூல்களையும், பிறகு பெரிய நூல்களையும் அச்சிட மனங்கொண்டு, இரத்தினச்சுருக்கம், பிரமமுனி கருக்கடை, தேரன் பொருட்பண்பு வெண்பா இவைகளை அச்சிடத் தொடங்கினோம். இதில் இரத்தினச் சுருக்கம் அச்சியிலுளது. கடைகளிலும் கிடைக்கும். ஆனால் பிழைகள் மலிந்தது. பிரமமுனி கருக்

கடை அச்சிலிருந்தபோதிலும் இப்போது கடைகளில் கிடைப்பதில்லை. பொருட்பண்பு வெண்பா இதுகாறும் அச்சில் வரவேயில்லை. இவ்வாறான மூன்றுவித நூல்களை அச்சிட்டுவந்ததில் இரத்தினச் சுருக்கம் முடிவுபெற்றது. மற்றவையும் பூர்த்திபெறுமுன் காகிதப் பஞ்சம் தோன்றிற்று. இவ்விடையூறு ஒருபுரமிருக்க, அச்சிலுள்ள இரத்தினச் சுருக்கத்தை மறுபடியும் ஏன் அச்சிடவேண்டும்? என வைத்தியபூபதி G. கண்ணுசாமி பிள்ளை முதலியோர்கள் தடை கூறுகின்றனர். எமது கருத்தைக் கீழ் விளக்குவாம்.

புதிதாக 1940 ம் ஆண்டு சென்னை B. இரத்தினநாயகர் ஸன்ஸ் அவர்களால் அச்சிடப்பட்ட வைத்திய இரத்தினச் சுருச்கத்தை நோக்குவாம். அதில் மூன்ருவது செய்யுள் நான்காவது அடியில்

'சேத்துமந்தன்னிற் பித்தந் தீர்க்கரன் றுவாதமாமே' என்றிருக்கிறது. இது விளங்குகிறதா? பொருள் என்னை? இதனைத் திருத்தி

'சேத்துமந் தண்ணீர் பித்தந் தீக்காற்று வாதமாம்' என்று அமைக்கப் பொருள் தானே விளங்கவில்லையா?

நான்காவது செய்யுளில்

'வாதத்தில் வாதமாகில் வளர்ந்திடு மன்னம்போல நீதுய்த்த வுடலினேர்ந்து நெகிழ்ச்சியாய்ச் சுருங்கும்வாங்கும்' என இருப்பதை

'வாதத்தில் வாதமாகில் வளர்ந்திட அன்னந்தன்னை நீதுய்த்த வுடலு நேர்ந்து நெகிழ்ச்சியாய் சுருங்கும் வாங்கும்' என திருத்த, பொருள் எளிதில் விளங்குகிறது.

ஆருவது செய்யுள் முதலடியில்

'வாதத்தில் சேத்துமமாகில் வலியொடு வீக்கமுண்டாம், என்றும் கடைசியடி இறுதியில் 'வீக்கமுண்டாம்' என்று மறுபடியும் அச்சிடப்பட்டுள்ளது. இது 'கூறியது கூறல்' எனும் குற்றமாகும். ஆகையால், இறுதி யடியை 'விக்கலுண்டாம்' என திருத்தப் பொருந்தும். 33 வது செய்யுளில் சித்தானந்த வைரவத்தில் சேரும் சரக்குகளைக் கூறுகையில் 'சேரப்பா திரிகடுகு சிவப்பு நாவல் திறமான வெரிச்சலொடு பொரிச்சலேழும்' எனவும்

97 வது செய்யுளில் 'விள்ளவே வில்வவேர் வமடகா வேர்' எனவும்

169 வது செய்யுளில் 'மிருகாபழச் சாறுபடி ரெண்டு' எனவும் காணப்படுகின்றன.

சித்தானந்த வைரவத்தில் நாவல் சேர்கிறதா? அது நாபி என்றல்லவா யிருக்கவேண்டும். 97ம் செய்யுளின் தலைப்பு 'சரபங்க வில்வாதி லேகியம்' என்று இருக்கிறது. இது தவறு. சரபுங்க வில்வாதி லேகியம் என்றிருக்க வேண்டும். சரபுங்கம் என்றால் முட்காவேளை. ஆகையால் 'வில்வவேர் முட்காய்வேளைவேர்' என்று பாடத்தை மாற்றவேண்டும். 169 வது செய்யுளில் 'ஆமலகச்சாறு படியிரண்டு எனத் திருத்தி யமைக்கவேண்டும். இதன் தலைப்பும் தவறாக அச்சிடப்பட்டுள்ளது. அதனை 'பிருங்காமலக தைலம்' என்று திருத்த வேண்டும். அப்பதிப்பிலுள்ள வேறு தலைப்புகளை நோக்குக. சவுபாக்கிய சுண்டு, திருதராட்சதச் சூரணம், அசுவகெந்தி பலராட்சதத் தைலம், மஸ்துமி ரசாயனம், சிலோதாரிமணி என இருக்கின்றன.

'எல்லாப் பெயர்களும் பொருள் குறித்தனவே' என பண்டை நூல் தொல்காப்பியம் கூறுகிறது. அங்ஙனமிருக்க முற்கூறிய பெயர்களால் என்ன பொருள் விளங்குகிறது? மருந்துகள், அம்மருந்துகளில் சேரும் முக்கிய சரக்கு அல்லது சரக்குகளின் பெயர்களையோ அல்லது தம் தொழில் வன்மைகளுக்கு ஏற்ற பெயர்களையோ அல்லது இயற்றுபவர் அல்லது சித்தர்கள் முதலியவர்களின் பெயர்களையோ பெரும்பாலும் பெற்றிருப்பதைக் காண்கிறோம். ஆதலால் முற்கூறிய பெயர்கள் எங்ஙனம் திருத்தவேண்டுமென்பதைக் கவனிப்போம். சவுபாக்கிய சுண்டு' எனும் மருந்தில் சுக்கு பிரதானமாகச் சேர்கிறது. சுக்குக்குச் சுண்டி என வேறு பெயர் இருப்பதால் மேற்கூறிய பெயர் சௌபாக்கிய (மிகு பாக்கியம் பெற்ற) சுண்டி என மாற்றப்பட வேண்டும். 'திருதராட்சதச் சூரணம்' எனப்படும் மருந்தில் முந்திரிகையாகிய திராட்சை முதற் சரக்காவதால் 'திராட்சாதிச் சூரணம்' என்றும் அசுவகெந்தி பலராட்சதத் தைலத்தில் அமுக்கராவாகிய அசுவகந்தியும், சிற்றாமுட்டியாகிய பலாவும், கொம்பரக்காகிய லாட்சாவும் சேர்வதால் 'அசுவகந்தி பலாலாட்சா தைலம்' என்றும், 'மஸ்துமிரசாயனத்தில், பறங்கிச்சக்கை என வழங்கும் சினபட்டையாகிய மதுஸ்மிகி சேர்வதால் 'மதுஸ்மிகி ரசாயனம்' என்றும் அத்தலைப்புகளைத் திருத்தவேண்டும். 'சிலோதாரிமணி' என அச்சிடப்பட்ட மருந்து நீரடைப்பு, சதையடைப்பு, வயிறு வீக்கம் முதலியவற்றை, நீரைக் கழித்து தீர்ப்பதால் அதை மேற்படி பொருளின்றி யிருக்கும் பெயரால் வழங்குவதை விட்டு, சலோதரத்தை நீக்கும் மணி எனப் பொருள் படும்படி 'சலோதராரிமணி' என வழங்குவது மேன்மையாகத்தோன்

றவில்லையா? இன்னும் அநேக பிழைகளிருக்கின்றன. அவைகளை யெல்லாம் எடுத்துக்கூற இங்கு இடங்கொள்ளாதாகையால் இவற்றுடன் நிறுத்திக்கொள்வாம்.

இரத்தினச் சுருக்கத்தில் மட்டுமன்றி மற்ற நூல்களிலும் பிழைகள் அதிக முண்டு. ஒரு பழய பிரதியைப் பார்த்துவேறு பிரதிஎழுதும்போது சில பிழைகள் புகும். இங்ஙனமே புது பிரதிகள் எழுதுந்தோரும் புது புது பிழைகள் தோன்றி நாளடைவில் பலவாகி, அச்சிட்டபோதும் அச்சுப்பிழைகளும் சேர்ந்து அவை மலிந்தன. ஆகையால் நூல்களைத் திருத்த வேண்டுமாயின் பல பழைய ஏட்டுப் பிரதிகளையும், அச்சிட்ட பல பதிப்புகளையும், வேறு நூல்களையும் ஒப்புநோக்கித் திருத்தி அச்சிடவேண்டியதாயிற்று.

முதலில் சிறு நூல்களைத்தான் அங்ஙனம் அச்சிடவேண்டும். ஏனெனின், பிறர் உதவியின்றிப் படித்துப் பொருள் அறியக்கூடிய நூல்கள் பிழையில்லா திருந்தால்தான் மாணவர்களே அவைகளைப் படித்துக்கொள்ளலாம். ஆசானிடம் கற்கவேண்டிய நூல்களிலுள்ள பிழைகளைத் திருத்தி அமைக்காவிட்டாலும் பாடங்கேட்கையில் அவரே திருத்தி பாடஞ் சொல்வாராகையால் அவைகளை முதலில் திருத்த வேண்டியதில்லை. தமிழர்களே! வைத்தியர்களே! அன்பர்களே! தமிழ் வைத்திய நூல்கள் பிழையின்றி வெளிவர உதவி புரிவீர்களாக! இக்கடமையை ஏற்றுள்ள தமிழ் மருத்துவப் பொழிலைப் பலவகையினும் ஆதரிப்பீர்களாக!

---

## தமிழ் மருத்துவப் பொழிலின் வளர்ச்சிக்காக நன்கொடை யளித்த பெரியார்களின் பெயர்கள்

—:0;—

| | | |
|---|---|---|
| சிதம்பரம் (சித்தவகுப்பு மாணவன்) | ... | ரூ. 10. |
| Dr. S. A. ராசையா (யாழ்ப்பாணம்) | ... | ரூ. 4. |

---

# தாரை

(95 ம் பக்கத் தொடர்ச்சி)

தாரை செய்யும் விதம் :— நல்ல வெளிச்சமும் காற்றுமுள்ள தாராளமான அறையில் தாரை செய்யவேண்டும். ஆனால் அங்கு பெருங் காற்று வீசக்கூடாது. தாரை செய்வதற்கு ஒரு நாள் முன்னறே அவ்வறையையும் துரோணியையும் நீர்விட்டுக் கழுவி சுத்தப்படுத்தி துரோணியை நடுவில்வைத்து, அதைச் சுற்றிலும் வைத்தியர், மாணவர், வேலையாட்கள் உட்கார பீடங்கள் அமைக்கவேண்டும்.

தாரைச் சட்டி அடியிலிருந்து தொங்கும் வத்தியின் நுனி, துரோணியில் நோயாளி படுத்திருப்பின் அவன் நெற்றிக்கு நேர் நான்கு விரற்கடை உயரத்தில் தொங்கும்படி தாரைச்சட்டியைக்கட்ட வேண்டும். ஆச்சாரமான வைத்தியர்கள் தீபத்தை (குத்துவிளக்கை) ஏற்றி தலைப்புறத்தில் வைத்து கடவுளைத் துதித்து நோயாளியைத் துரோணியில் படுக்கவைப்பார்கள். இப்படியாக எல்லாவற்றையும் தயார் செய்துகொள்ள வேண்டும்.

நோயாளி மலஜலங்களைக் கழித்துக் கைகால்களைக் கழுவி சுத்தஞ்செய்துகொண்டு அவ்வறைக்குள் வந்து, கடவுளை முனகூறியவாறு வணங்கியபிறகு துரோணியின் நடுவில் உட்காரவேண்டும். பாதங்களிலிருக்கும் ஈரம், மண் முதலியவைகளை ஒரு ஆள் துடைக்க வேண்டும். தலைக்கு உபயோகிக்கப்படும் தைலத்தில் கொஞ்சம் எடுத்து ஒழுகாதபடி வைத்தியர் அவன் தலையில் தேய்க்க வேண்டும். விரல்களால் தொட்டு மூக்கு, காது துளைகளில் இரண்டொரு துளிகள் விட்டு, கண்களில் படாது முகத்திலும் சிறிது தேய்க்கவேண்டும். கூந்தல் நீளமாயிருந்தால் கோதி பின்புறத்தில் முடியிட வேண்டும். தலையைச்சுற்றி கட்டுவதற்காக வைத்திருக்கும் துணிவத்தியை அதன் ஒரு நுனியின் அருகாமையிலுள்ள பாகத்தை அத்தைலத்தில் தோய்த்து, விரல்களால் வழித்து, அப்பாகம் நெற்றியில் படும்படியும் முடி காதண்டை வரும்படியும் தலையைச்சுற்றி கட்டவேண்டும். தலைக்கு எண்ணெய் தடவும்போது, ஒரு ஆள் உடம்புக்கு உபயோகிக்கப்படும் எண்ணெயை முதுகுக்குத் தேய்க்கவேண்டும். படுத்தால் துரோணியில் எவ்விடத்தில் முதுகு படியுமோ, அவ்விடத்திலும் கொஞ்சம் எண்ணெயைத் தடவவேண்டும். பிறகு தலையணையின்மீது தலையை வைத்து நோயாளி அதில் மல்லாந்து கை, கால்களை நன்றாய் நீட்டிப் படுக்கவேண்டும். தாரைச்சட்டி சரியான உயரத்தில் தொங்குகிறதா

வென்று பார்த்து, சரியில்லையென்றால் சரிப்படுத்தவேண்டும். வைத்தியர் தலையண்டை இடதுபக்கம் உட்கார்ந்துகொண்டு அச்சட்டியை இடதுகையால் பிடித்து வலது உள்ளங்கையால் அதன் அடியிலுள்ள வத்தி துவாரத்தைக் கெட்டியாக அழுத்தி மூடிக்கொள்ளவேண்டும். ஒரு ஆள் தாரை திரவத்தை நன்றாய்க் கலக்கி அளவுபடி அதனுள் விடவேண்டும். பிறகு ஒரு ஆள் ஒரு சிறு சட்டியை தாரைச்சட்டியின் அடியில் ஏந்த, துவாரத்தை யடைத்திருந்த வலது கையை வைத்தியர் நீக்கவேண்டும். அப்போது திரவம் அவ்வத்தியின் வழி வெளி வரத் தொடங்கும். ஒருவித தடையின்றி ஒழுங்காயும், ஒரே அளவாயும் திரவம் வருகிறதாவென்று பார்க்கவேண்டும். அங்ஙனம் வந்த பிறகுதான் நோயாளியின் நெற்றியில் விழும்படிச் செய்யவேண்டும். நெற்றியில் ஒருபக்கத்திலிருந்து மறுபக்கம் வரையிலும் ஒழுங்காக விழும்படி சட்டியை மெல்ல ஆட்டவேண்டும். இங்ஙனம் விழும்படி தொடங்கியபிறகு எக்காரணத்தினாலும் நடுவே நிறுத்தக் கூடாது. ஒழுகும் திரவமும் ஒரே அளவாக வரவேண்டும். இதன்பொருட்டு தாரைச் சட்டியிலுள்ள திரவம் எச்சமயத்திலும் அதிகமாகக் குறையாது ஒரே அளவாக இருக்கவேண்டும். ஆகையால் துரோணியின் தலைபுறத்திலுள்ள துளையின் வழியாக வெளிவரும் திரவத்தை ஒரு சிறு சட்டியில் பிடித்து, அடிக்கடி திரவச்சட்டியில் விடவேண்டும்.

உடலுக்கு உபயோகிக்கும்படியான எண்ணெயைச் சுடவைத்து ஒரு சிறு சட்டியில் ஊற்றி எடுத்துக்கொண்டு ஒரு பக்கத்திற்கு இருவராக இருபுறத்திலும் உட்காரவேண்டும். ஒவ்வொருவரும் எண்ணெயைத் தோய்த்து உடம்பில் தடவ ஒரு சதுரத்துண்டு துணியையும் வைத்துக்கொள்ள வேண்டும். நோயாளி படுத்தவுடன் துணிகளை எண்ணெயில் தோய்த்து உடல், கை, கால்கள்மீது பிழிந்து மற்ற பாகங்களிலும் படும்படி இலேசாகத் தேய்க்கவேண்டும். இங்ஙனம் இவர்கள் செய்ய, எண்ணெய் துரோணியில் தேங்கும். இவ்வெண்ணெயை வேறு ஒரு ஆள் அப்போதைக்கப்போது துணியால் பிரட்டி ஒரு சட்டியில் பிழிந்துகொண்டு நீர்யந்திரத்தில் காய்ந்து கொண்டிருக்கும் எண்ணெய்ச்சட்டியில் விடவேண்டும். போதுமளவு சூடான பிறகு அந்த எண்ணெயை நால்வரிடமுள்ள சட்டிகளில் சமமாக ஊற்றவேண்டும். வேண்டியபோது நோயாளி வாட்டமாகத் திரும்பலாம். கண், மூக்கு முதலிய துளைகளில் எண்ணெய் தெறித்தால் உடனே அதைச் சுத்தத் துணியால் வைத்தியர் துடைக்கவேண்டும்.

தாரை செய்யவேண்டிய நேரம் முடிந்தவுடன் நோயாளியின் உடல் மீதுள்ள எண்ணெயைத் துண்டுதுணிகளால் மிருதுவாகத் துடைத்து நீக்கவேண்டும். தாரையை நிறுத்தி, தலையில் கட்டியுள்ள

வத்தியை அவிழ்த்து, நோயாளியை உட்காரவைத்து, தலையிலுள்ள தாரை திரவத்தைத் துடைத்து நீக்கவேண்டும் அதேசமயத்தில் இரு ஆட்கள் உடலுக்குத் தேய்க்கும் எண்ணெயைப் பிடரியிலும் முதுகிலும் தேய்த்து இலேசாகப் பிடிக்கவேண்டும். இதனால் வெகு நேரம் படுத்திருப்பதால் உண்டாகும் திமிர் நீங்கும். தலைக்கு முன் தேய்த்த எண்ணெயை உள்ளங்கையில் ஊற்றி நெற்றியில் தடவித் தேய்க்கவேண்டும்.

பிறகு பக்கத்திலுள்ள குளிக்கும் அறைக்கு நோயாளியைமெல்ல அழைத்துச்சென்று ஒரு முக்காலியில் உட்காரவைக்கவேண்டும். அவ்விடத்தில் இரண்டு நீராடு தொட்டிகளோ அல்லது இரு பெரிய பாத்திரங்களோ இருக்கவேண்டும். ஒன்றில் தலைக்கு விடும்படியான நீரும் மற்றதில் உடலுக்கு விடும்படியான நீரும் தக்க அளவு இருக்க வேண்டும். ஒரு சிறு செம்பினால் நீரைமொண்டு தலையில் கொட்டி பச்சைப்பயறு மா தேய்த்து, எண்ணெய்ப் பசையை நீக்கவேண்டும். மறுபடி தலையில் நீரை ஊற்றி சுத்தப்படுத்தவும். இம்மாதிரி மேலும் ஒரு முறை செய்வது நன்று. உடலையும் மேற்படி மாவால் தேய்த்து எண்ணெய்ப் பசையை நீக்கி உடலுக்காக வைத்திருக்கும் நீரால் குளிப்பாட்டவும். தலையை ஒரு குட்டையாலும், உடலை மற்றொன்றாலும் துடைத்து ஈரத்தைப் போக்கி, சுத்தமானதும், உலர்ந்ததுமான ஆடைகளை அணிவிக்கவேண்டும். நீண்ட கூந்தலையுடையவர்கள் தலையில் குட்டையை கொஞ்சநேரம் கட்டிவைத்தால் மயிர் இடுக்குகளிலுள்ள ஈரமும் இழுக்கப்படும்.

தலைக்குத்தூவ வேண்டிய சூரணங்களில் (இராசனாதி, கர்ச்சூராதி மரீச்சாதி சூரணங்களில்) ஒன்றைத் தக்கவாறு தேர்ந்தெடுத்து உச்சியில் தேய்க்கவும்.

பிறகு மருந்துகளைக் கொடுத்து, மாமிசரசம் முதலிய உணவுகளைக் கொடுக்கவேண்டும். அவன் காற்று, வெய்யில், குளிர்படும்படி இருக்கக்கூடாது. திறந்த இடத்திலும் (கூரையில்லாவிடத்திலும்) படுக்கக்கூடாது. பகல் நித்திரை செய்யக்கூடாது. இளைப்பும் வருத்தமுமுண்டாகும்படி கடினமான வேலைகளைச் செய்யலாகாது. (தொடரும்)

---

# பதிவுசெய்த இந்திய வைத்தியர்களின் மாநாடு

இம்மாநாடு பிஷக்ரத்னம் டாக்டர் எ. லக்ஷிமிபதி அவர்களின் தலைமையில் கீழ்ப்பாக்கம் "ஓங்கார கோட்டியில்" 26ம் தேதி ஜூன் மாதம் நடந்தது. பல வைத்தியர்கள் மாகாணத்தின் பல ஜில்லாக்களிலிருந்தும் வந்தனர்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. வைத்தியரத்தினம் பண்டித எம். துரைசாமி அய்யங்கார் பேசுகையில், சர்க்கார் இந்திய மருத்துவர்களின் மதிப்பைக் குறைக்கும்விதம் பல நடவடிக்கைகளைச் செய்து கொண்டுவருவதினால் இம்மகாநாடு திடீரென்று கூட்டப்பெற்றதென்று விளக்கி அச்சர்க்காரின் போக்கைக் கண்டித்தார்.

மாஜி மந்திரி திரு. வி. வி. கிரியவர்கள் இம் மாநாட்டைத் தொடக்கிவைத்தபோது இச்சர்க்காரின் பொறுப்பற்ற செய்கைகள் தனக்கு எள்ளளவும் ஆச்சிரியத்தை உண்டாக்கவில்லையென்றும், ஒவ்வொரு இந்திய குடும்பத்திலும் வேரூன்றி இரத்தத்தில் கலந்திருக்கும் இவ்விந்திய மருத்துவத்தை ஒழிப்பதோ, விரட்டுவதோ நடவாதக் காரியமென்றும், அங்ஙனம் செய்ய அவர்கள் (சர்க்கார்) எடுக்கும் முயற்சிகளே அவர்களை ஒழித்துவிடக்கூடும் என்றும் கூறினர்.

பிறகு மகாநாட்டுத்தலைவர் பேசுகையில் ஆயுள்வேதத்தினால் ஆயுள் விருத்தியும் மனநிம்மதியும் உண்டாகிறதென்றும், இதன் அடிப்படையான அஹிம்சை தத்துவந்தான் உலக யுத்தத்தை நிறுத்தி, (நிம்மதி) சமாதானத்தை நிலைநாட்டுமென்றும், வரப்போகும் நெருக்கடியான காலத்தில் இந்திய மருத்துவர்கள்தான் மிக்க உபயோகப்படுவார்களென்றும், இனி நம் முன்னேற்றத்திற்கு சர்க்காரை எதிர்பார்க்க வேண்டாமென்றும் விளக்கினர்.

பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் ஒன்றால் (க) இந்திய வைத்தியம் கற்றவர்கள் 'ரிஜிஸ்தர்' என்றப் பட்டத்தை உபயோகிக்கக் கூடாதென்று சர்க்கார் நடவடிக்கைகளை மேலும் செய்துவருவார்களேயானால், நம்பிக்கைத்துரோகம் செய்ததாக அச்சர்க்கார்மீது, ரிஜிஸ்டர் கட்டளை செலுத்திய எல்லாஇந்திய வைத்தியர்களும் வழக்குத் தொகுக்க வேண்டுமென்றும்

(உ) Central Board of Indian Medicine யை சர்க்கார் மதிப்பின்றி நடத்துவதை இம்மாநாடு கண்டிக்கிறது. மேலும், மந்திரிகள் காலத்து பிறப்பித்த சர்க்கார் உத்திரவுகளை ரத்துசெய்யக்கூடிய தற்கால சர்க்காரின் உத்திரவுகளை நீக்கவேண்டுமென்று கவர்னருக்கு வணக்கத்துடன் தெரிவித்துக்கொண்டது.

மற்றொரு தீர்மானத்தால் மக்கள் பெரும்பாலோர் இந்திய மருத்துவத்தையே நாடுகின்றனர் என்று வைசிராய் கவுன்சில் மெம்பராகிய N. R. சர்க்கார் கூறியதைத் தாங்கள் பாராட்டுவதுடன், கவர்னர் அவர்களும் அதைக் கவனித்து அங்ஙனம் உபயோகப்படும் இந்திய மருத்துவத்திற்கும், மருத்துவர்களுக்கும் ஆதரவுகளும் சலுகைகளும் காட்டவேண்டுமென்றும் வேண்டிற்று.